<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>

<u>ஜெயங்கொண்டம்.</u>

<u>CC.No. 92 /2019</u>

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் திங்கள்கிழமை அரசு தரப்புசாட்சி–03, திரு.மணிகண்ணன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன்,மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மணிகண்ணன் | வயது | : | 35/26 |
| த.பெ/ க.பெ. | : | சக்கரவர்த்தி | தொழில் | : | ஓட்டுநர் |
| ஊர் | : | வடவீக்கம் | நிலை | : | LW 07 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் )**

<u>முதல்விசாரணை:</u>

நான் வடவீக்கத்தில் வசித்து, ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். **என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில்உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம்மட்டும் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை என் சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் செய்து கொடுத்தேன். போலீசார்

என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரியைத் தெரியாது. கடந்த 13.06.2018 ம் தேதி நண்பகல் 12.00 மணியளவில், சொந்த வேலையாக நானும் அன்பழகன் எங்கள் ஊர் கல்லறை அருகில் சென்றுக்கொண்டிருந்தபோது, ஜெயங்கொண்டம் போலீசார் அங்கு வந்து, சின்னையனுக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள் என்றும், அவர்கள் எழுதிக்கொண்ட பேப்பரில் நானும் அன்பழகன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

**மறு விசாரணை – இல்லை**

/ உண்மை நகல் /

ஒம்/–ப.கனிமொழி,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,

ஜெயங்கொண்டம்.